செ.வெ.எண்.68 நாள்.29.12.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை மத்திய அரசின் உள்துறை இணை செயலாளர் திரு.சஞ்சீவ் குமார் ஜிந்தால்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலான மத்திய குழுவினர், வருவாய் நிர்வாக ஆணையர் திரு.கே.சத்திய கோபால்,இ.ஆ.ப., அவர்கள், வேளாண்மை உற்பத்தி ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தனர்.

-------

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை மத்திய அரசின் உள்துறை இணை செயலாளர் திரு.சஞ்சீவ் குமார் ஜிந்தால்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலான மத்திய குழுவினர், வருவாய் நிர்வாக ஆணையர் திரு.கே.சத்திய கோபால்,இ.ஆ.ப., அவர்கள், வேளாண்மை உற்பத்தி ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இன்று (29.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தனர்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், திருக்குறுங்குடி பேரூராட்சிக்குட்பட்ட நம்பிதலைவன்பட்டயம்–ஆவரந்தல் சாலையில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நம்பியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் சேதமடைந்துள்ளதையும், நம்பிதலைவன்பட்டயம் கிராமத்தில் கனமழையின் காரணமாக திரு.இராமையா என்பவரின் வீடு சேதமடைந்துள்ளதையும் குழுவினர் பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து, ஏர்வாடி பகுதியில் சேக்முகமது என்ற விவசாயின் வாழை மரங்கள் சேதமடைந்துள்ளதையும், சிறுவளஞ்சி–அணைக்கரை இணைக்கும் வகையில் 2009ம் ஆண்டில் ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் ரூ.26 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பாலம் வெள்ளத்தால் சேதமடைந்துள்ளதையும் குழுவினர் பார்வையிட்டனர்.

பின்னர், வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

தமிழகத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய அரசின் குழுவினர் பார்வையிட்டு வருகின்றனர். நேற்று (28.12.2017) கன்னியாகுமரி மாவட்டத்தில் குழுவினர் நேரில் பார்வையிட்டனர். இன்று திருநெல்வேலி மாவட்டத்தில் நம்பித்தலைவன்பட்டயம், ஏர்வாடி, சிறுவளஞ்சி ஆகிய பகுதிகளில் சேதம் குறித்து குழுவினர் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளனர். நம்பிதலைவன்பட்டயம் பகுதியில் அண்மையில் கட்டப்பட்டுள்ள பாலம் சேதமடைந்துள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாலம் சேதம் குறித்து கண்காணிப்பு பொறியாளர் தலைமையில் ஆய்வு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். ஆய்வில் பாலம் எதனால் சேதமடைந்தது என தெரியவரும். கட்டுமானப் பணிகளில் தவறுகள் இருந்தால் சம்மந்தப்பட்ட நபர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தொடர்ந்து, மத்திய குழுவினர் சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளவுள்ளார்கள் என தெரிவித்தார்.

ஆய்வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம் பகவத்,இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.பெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.மாஹின் அபுபக்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவி செயற்பொறியாளர் திரு.சக்தி முருகன் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.